இன்றைய செய்தி நாளைய வரலாறு

முரசொலி
நிறுவனர் : கலைஞர் மு. கருணாநிதி
திங்கள்கிழமை 04-03-2024

# எந்த திட்டத்துக்கு தடை போட்டோம்? - 1

**தமிழ்நாட்டுக்கு திட்டங்களுக்கு மேல் திட்டங்களை கொண்டு வந்து திணித்தது போலவும் அதற்கு தமிழ்நாடு அரசு ஒத்துழைக்கவில்லை என்பதைப் போலவும் பிரதமர் மோடி திருநெல்வேலியில் பேசி இருக்கிறார். "எந்தத் திட்டத்தைக் கொண்டு வந்தார். எதற்கு நாங்கள் தடையாக இருந்தோம்" என்று கேட்டுள்ளார் தமிழ்நாடு முதலமைச்சர் மு.க.ஸ்டாலின் அவர்கள். அதற்கு இதுவரை பதில் இல்லை. அவர்கள் அறிவித்த திட்டத்துக்கு அவர்களே தடையாக இருக்கிறார்கள் என்பது தான் உண்மை.**

**1. மதுரை எய்ம்ஸ்**

'தமிழ்நாட்டில் எய்ம்ஸ் மருத்துவமனை அமைப்பதற்கான இடத்தை தேர்வு செய்யுங்கள்' என்று முதன்முதலாக 19.6.2014 அன்று தமிழ்நாடு அரசுக்கு ஒன்றிய அரசு கடிதம் அனுப்பியது. இரண்டு இடங்களைத் தேர்வு செய்து 31.0.2014 அன்று தமிழ்நாடு அரசு, ஒன்றிய அரசுக்கு கடிதம் எழுதியது.28.2.2015 அன்று ஒன்றிய நிதிநிலை அறிக்கையை தாக்கல் செய்த நிதியமைச்சர் அருண் ஜெட்லி, 'மதுரையில் எய்ம்ஸ் மருத்துவமனை அமையும்' என்று சொன்னார். 2017 ஆம் ஆண்டு ஆகஸ்ட் மாதம் மதுரை உயர்நீதிமன்றத்தில் பொதுநல வழக்கு தாக்கல் செய்யப்பட்டது. மதுரையில் எய்ம்ஸ் மருத்துவமனை அமைய நான்கு மாத காலக்கெடுவை நீதிமன்றம் விதித்தது.

2018 ஆம் ஆண்டு ஜூலை 15 ஆம் தேதி எய்ம்ஸ் மருத்துவ மனைக்கு பிரதமர் அடிக்கல் நாட்டுவார் என்று தேதியே குறித்தார்கள். அடிக்கல் நாட்டப்படவில்லை. 2019 ஆம் ஆண்டு நாடாளுமன்றத் தேர்தல் வந்ததால், 2019ஆம் ஆண்டு ஜனவரி மாதம் 27 ஆம் தேதி அடிக்கல் நாட்டினார் பிரதமர்.

மாநில அரசிடமிருந்து 224.24 ஏக்கர் நிலம் ஒன்றிய அரசிடம் ஒப்படைக்கப்பட்டது. திட்ட மதிப்பீடு ஆயிரத்து 977 கோடி ரூபாயாக அதிகரித்த நிலையில், ஓராண்டு கழித்து ஜப்பான் நிறுவனத்திடம் இருந்து கடன் பெறும் ஒப்பந்தம் கையெழுத்தானது. 82 சதவீதம் நிதியான ஆயிரத்து 627 கோடி ரூபாய் ஜப்பானின் ஜைய்கா நிறுவனத்திடம் இருந்து கடன் பெறப்படும். எஞ்சிய 18 சதவிகிதம் மட்டுமே ஒன்றிய அரசு வழங்கும் என கூறப்பட்டது. மற்ற மாநிலங்களில் அமைக்கும் மருத்துவமனைகள் எல்லாம் பா.ஜ.க. அரசின் நிதியில் இருந்து அமைக்கப்பட, தமிழ்நாட்டுக்கு மட்டும் அந்நிய நாட்டின் நிதியை எதிர்பார்த்தார்கள். **இப்போது ராமநாதபுரத்தில் வாடகை கட்டடத்தில் இருக்கிறது எய்ம்ஸ். மதுரையில் ஒரு வாடகை கட்டடம் பார்த்துக் கொண்டு இருக்கிறார்கள். இதுதான் பிரதமரின் எய்ம்ஸ் திட்டத்தின் லட்சணம் ஆகும்.**

**2. சென்னை மெட்ரோ**

8.4.2023 அன்று பல்லாவரத்தில் நடந்த விழாவில் பிரதமர் முன்னிலையில் பேசும் போது தமிழ்நாடு முதலமைச்சர் அவர்கள், "சென்னையில் செயல்படுத்தப்பட்டு வரும் மெட்ரோ ரயில் திட்டத்தின் இரண்டாவது கட்டப் பணிகளுக்கான ஒன்றிய அரசின் பங்கினை வழங்குவதற்கான ஒப்புதல் கடந்த இரண்டு ஆண்டுகளாக ஒன்றிய அரசில் நிலுவையில் உள்ளது" என்றார். அதற்கு பிரதமரின் பதில் என்ன?

சென்னையில் 2ஆம் கட்ட மெட்ரோ ரயில் திட்டத்திற்கு ஒன்றிய அரசு அனுமதி அளிக்காததால், நிதி கிடைக்கவில்லை. இதனால் திட்டப்பணிகள் நடைபெறுவதில் கால தாமதம் ஏற்பட்டுள்ளது. ஒன்றிய அரசும், தமிழ்நாடு அரசும் இணைந்து கூட்டு முயற்சி அடிப்படையில், 50:50 என்ற சமபங்கு வீதத்தில், சென்னை மெட்ரோ ரயில் நிறுவனத்தின் முதற்கட்டப் பணிகள் வெற்றிகரமாக செயல்படுத்தப் பட்டன. இதனடிப்படையில், 63,246 கோடி ரூபாய் செலவில், 119 கிலோமீட்டர் நீளமுள்ள மேலும் மூன்று வழித் தடங்களைக் கொண்ட 2ம் கட்டப் பணிகளுக்கு தமிழ்நாடு அரசால் ஒப்புதல் அளிக்கப்பட்டு, 2019 ஜனவரி மாதத்தில் ஒன்றிய அரசின் ஒப்புதலுக்காக ஒன்றிய வீட்டுவசதி மற்றும் நகர்ப்புற விவகாரங்கள் அமைச்சகத்திற்கு அனுப்பப்பட்டது.

ஒன்றிய வீட்டுவசதி மற்றும் நகர்ப்புற விவகார அமைச்சகம் மற்றும் நிதி ஆயோக் ஆகியவற்றின் பரிந்துரையுடன், ஜப்பான் பன்னாட்டு கூட்டுறவு முகமை, ஆசிய வளர்ச்சி வங்கி, ஆசிய உட்கட்டமைப்பு முதலீட்டு வங்கி, புதிய வளர்ச்சி வங்கி ஆகியவற்றின் நிதி ஒப்புதல்களும் இறுதி செய்யப்பட்டு அனுப்பப்பட்டது. இதற்குப் பிறகு, ஒன்றிய உள்துறை அமைச்சர் 21.11.2020 அன்று சென்னை மெட்ரோ ரயில் திட்டத்தின் இரண்டாம் கட்டப் பணிகளுக்கு அடிக்கல் நாட்டினார். ஆனால் இதுவரை ஒன்றிய அரசு திட்ட அனுமதியைத் தரவில்லை. பிரதமரை பல்முறை நேரில் சந்தித்தும் முதலமைச்சர் அவர்கள் இது பற்றி விளக்கி இருக்கிறார். ஆனாலும் அனுமதி கிடைக்கவில்லை.

இந்தத் திட்டத்திற்கான முன் மொழிவு பொருளாதார விவகாரங்களுக்கான அமைச்சரவைக் குழுவின் ஒப்புதலுக்காக இரண்டு ஆண்டுகளுக்கும் மேல் காத்திருக்கிறோம். இரண்டாம் கட்ட பணிகளை தமிழ்நாடு அரசு தனியாகத் தொடங்கி இருக்கிறது. பொருளாதார விவகாரங்களுக்கான அமைச்சரவைக் குழுவின் ஒப்புதல் இல்லாத நிலையில், ஒன்றிய அரசின் பங்கு நிறுத்தி வைக்கப்பட்டுள்ளதால், மாநில நிதியில் இருந்து செலவினங்கள் மேற்கொள்ளப்பட்டு வருகிறது. இது பணிகளின் வேகத்தைக் குறைத்துள்ளதோடு, மாநில அரசுக்குக் கடுமையான நிதிநெருக்கடியை ஏற்படுத்தியுள்ளது.

**ஆண்டுக்கு 12 ஆயிரம் கோடியை தமிழ்நாடு அரசு மட்டும் செலவு செய்தாக வேண்டிய நிதி நெருக்கடி ஏற்பட்டுள்ளது. இதற்கு யார் காரணம்? பிரதமர் மோடி தான். ஒன்றிய அரசின் திட்டத்துக்கு நாம் தடையாக இல்லை. ஒன்றிய அரசின் திட்டத்தையே நாம் தான் செயல்படுத்திக் கொண்டு இருக்கிறோம்.**

**- தொடரும்**



திண்டுக்கல் மாநகர் கழகத்தின் சார்பில் தமிழ்நாடு முதலமைச்சர் பிறந்தநாள் விழா மற்றும் தமிழ்நாடு அரசு நிதிநிலை அறிக்கையின் விளக்கப் பொதுக்கூட்டத்தில் கழக துணை பொதுச் செயலாளர், அமைச்சர் இ.பெரியசாமி பேசினார். உடன் கழக துணை பொதுச் செயலாளர் க.பொன்முடி, கிழக்கு மாவட்டச் செயலாளர் இ.பெ.செந்தில்குமார், மாவட்ட துணைச் செயலாளர் நாகராஜன், மாநகர் செயலாளர் ராஜப்பா ஆகியோர் உள்ளனர்.

# கிராமங்கள்தோறும் சமுதாயக்கூடங்கள் அமைத்துக் கொடுக்கப்படும்!

## அமைச்சர் ஐ.பெரியசாமி பேச்சு!

சின்னாளபட்டி, மார்ச் 4-

கிராமப்புற ஏழை எளிய மக்களின் இல்ல விழாக்கள் குறைந்த செலவில் நடைபெற கிராமங்கள் தோறும் சமுதாயகூடங்கள் அமைத்துக்கொடுக்கப்படும் டி.புதுப்பட்டியில் நடைபெற்ற விழாவில் ஊரக வளர்ச்சித்துறை அமைச்சர் ஐ.பெரியசாமி பேச்சு ஊரக வளர்ச்சித்துறை சார்பாக கிராமப்புற சாலைகளுக்கு முக்கியத்துவம் அளித்து கிராமப்புற சாலைகள் மேம்படுத்தப்பட்டு வருகின்றன - அமைச்சர் ஐ.பெரியசாமி திண்டுக்கல் மாவட்டம் ரெட்டியார்சத்திரம் ஒன்றியம் டி.புதுப்பட்டியில் மகாத்மாகாந்தி தேசிய ஊரக வேலை உறுதி திட்டம் நிதி மூலம் ரூ.28.1 லட்சம் நிதியில் புதிய அலுவலக கட்டிட திறப்புவிழா மற்றும் கனிம நிதியில் ரூ.50லட்சம் மதிப்பில் சமுதாய கூடம் கட்டுவதற்கான அடிக்கல் நாட்டு விழா நடைபெற்றது. விழாவிற்கு மாவட்ட ஆட்சியர் மொ.ந. பூங்கொடி தலைமை தாங்கினார். ரெட்டியார்சத்திரம் ஒன்றிய பெருந்தலைவரும், ரெட்டியார்சத்திரம் தெற்கு ஒன்றிய தி.மு.க. செயலாளருமான ப.க.சிவகுருசாமி திண்டுக்கல் கிழக்கு மாவட்ட தி.மு.க. பொருளாளர் கு. சத்தியமூர்த்தி தலைமை செயற்குழு உறுப்பினர்கள் ஆத்தூர் நடராஜன், தண்டபாணி ஆகியோர் முன்னிலை வகித்தனர். ஊராட்சிமன்ற தலைவர் அருணாசலம் வரவேற்றார். விழாவில் சமுதாயகூடம் கட்டுவதற்காக அடிக்கல் நாட்டு விழாவை துவக்கி வைத்துவிட்டு ஊராட்சிமன்ற அலுவலகத்தை திறந்து வைத்து ஏற்றிய பின்பு பொதுமக்கள் மத்தியில் பேசிய ஊரக வளர்ச்சித்துறை அமைச்சர் ஐ.பெரியசாமி இன்று தமிழகத்தில் பெண்கள் தலை நிமிர்ந்து வாழ்கிறார்கள் என்றால் அதற்கு காரணம் முத்தமிழ் அறிஞர் கொண்டு வந்த பெண்களுக்கான இட ஒதுக்கீடுதான் என்றார். கலைஞர் வழியில் வந்த திராவிட மாடல் ஆட்சி நாயகன் மு.க.ஸ்டாலின் அவர்கள் மாதந்தோறும் குடும்ப தலைவிகளுக்கு அளித்துவரும் மகளிர் உரிமைத்தொகை அவர்களுக்கு மிகவும் உறுதுணையாக இருந்து வருகிறது. முன்பு கிராம மக்கள் தங்களுக்கு நாடகமேடை, கழிப்பறை வசதி, போன்ற அத்தியாவசியமான நலத்திட்டங்களை கேட்பார்கள் இப்போது தங்களுக்கு சமுதாயக்கூடம் (திருமண மண்டபம்) வேண்டுமென கேட்கிறார்கள் காரணம் மக்கள் தொகை அதிகரித்து வருகிறது. மேலும் நகரங்களுக்கு சென்று திருமண விழாக்களை நடத்தினால் இலட்சகணக்கில் செலவாகிறது. தற்போது தி.மு.க. ஆட்சியில் கிராமங்கள்தோறும் கட்டிக்கொடுக்கப்படும் சமுதாயக் கூடங்களினால் குறைந்த செலவில் அவர்கள் இல்ல விழாக்களை முடித்துக்கொள்கிறார்கள். புதுப்பட்டியில் இன்று ரூ.50லட்சம் மதிப்பில் சமுதாய கூடத்திற்கான பணி நடைபெற்றுள்ளது. இங்கு கட்டப்படும் கட்டிடம் வசதியுடன் சுமார் 400பேர் அமர்ந்து பார்க்ககூடிய அளவிற்கு சிறப்பாக திருமண மண்டபம் கட்டிக்கொடுக்கப்படும் மகளிர் உரிமைத் தொகை விடுபட்டவர்களுக்கு விரைவில் கிடைக்க நடவடிக்கை எடுக்கப்படும் என்றார். நிகழ்ச்சியில் வட்டார வளர்ச்சி அலுவலர்கள் கிருஷ்ணன், மலரவண்ணன், சட்ட மன்ற உறுப்பினர் முகாம் அலுவலக அலுவலர் வடிவேல் முருகன், ரெட்டியார்சத்திரம் வடக்கு ஒன்றிய செயலாளர் மணி, ஒன்றிய துணைப் பெருந்தலைவர் ராஜேஸ்வரி, மாவட்ட கவுன்சிலர் சுப்புலெட்சுமி சண்முகம், ஒன்றிய பொறியாளர்கள் மகேந்திரன், ராஜேஸ்கண்ணா, மண்டல துணை வட்டார வளர்ச்சி அலுவலர் சுமதி, ரெட்டியார்சத்திரம் நிலவள வங்கி மேலாளர் சக்கரவர்த்தி (எ) மணிமாறன் பொதுக்குழு உறுப்பினர் பெருமாள், குட்டத்துப்பட்டி டென்னி, மாவட்ட இளைஞர் அணி துணை அமைப்பாளர் ராஜேஸ்பெருமாள், ஒன்றிய குழு உறுப்பினர்கள் காளீஸ்வரி மலைச்சாமி, கோனூர் திருப்பதி, புதுப்பட்டி தி.மு.க. கிளைச்செயலாளர் உதயக்குமார், ரெட்டியார்சத்திரம் ஒன்றிய மாணவரணி அமைப்பாளர் செல்வம், இளைஞர் அணி அமைப்பாளர் புதுக்கோட்டை ரமேஷ், ஊராட்சிமன்ற துணைத் தலைவர் தங்கமணி முருகையா, இளைஞர் அணியை சேர்ந்த ஆர்.மணிகண்டன் உட்பட தி.மு.க. நிர்வாகிகள் பலர் கலந்து கொண்டனர். முன்னதாக புதுப்பட்டி கிளைச்செயலாளர் உதயக்குமார் தலைமையில் ஊரக வளர்ச்சித் துறை அமைச்சர் ஐ.பெரியசாமி அவர்களுக்கு மேளதாளம், வானவேடிக்கைகள் முழங்க உற்சாக வரவேற்பு அளிக்கப்பட்டது.

# எழும்பூரில் 33 குழந்தைகளுக்கு தங்க மோதிரம்!

சென்னை, மார்ச் 4 -

கழகத் தலைவரும் தமிழ்நாடு முதலமைச்சருமான தளபதி அவர்களின் 71 ஆவது பிறந்த நாளைப் பொதுமக்களுக்கு உதவிடும் வகையில் கொண்டாடும் முகமாக, கழகச் சட்டத் துறை இணைச் செயலாளரும் எழும்பூர் சட்டமன்ற உறுப்பினருமான வழக்கறிஞர் இ.பரந்தாமன் ஏற்பாட்டில், எழும்பூர் தொகுதி, 61 ஆவது வட்டம், பாந்தியன் சாலையில் அமைந்துள்ள எழும்பூர் அரசு தாய்சேய் நல மருத்துவமனையில் 01.03.2024 அன்று பிறந்த 33 குழந்தைகளுக்கு தங்க மோதிரம் மற்றும் பரிசுப் பொருட்கள் வழங்கப்பட்டன.

இந்நிகழ்விற்கு எழும்பூர் தெற்குப் பகுதி முன்னாள் செயலாளர் ஜெ.விஜயகுமார் முன்னிலை வகித்தார்.

முன்னாள் வட்டச் செயலாளர் ஆர்.புருஷோத்தமன், எழும்பூர் தெற்குப் பகுதி முன்னாள் பொருளாளர் கலையரசன், முன்னாள் மாவட்டப் பிரதிநிதி புரசை எஸ்.குமார், அவைத் தலைவர் வெ.மருதன், மாவட்டப் பிரதிநிதிகள் கமலக்கண்ணன், மா.காந்தி, எழும்பூர் தெற்குப் பகுதி வர்த்தக அணி அமைப்பாளர் ரா.வெற்றி வேல், பகுதி மகளிர் அணி துணை அமைப்பாளர் முத்துலெட்சுமி, 108வது வட்டத் துணைச் செயலாளர்கள் கே.சீனிவாசன், இந்திராணி, முன்னாள் மாவட்ட வழக்கறிஞர் அணி துணை அமைப்பாளர் விஜய போஸ், 108 (அ) வட்ட இளைஞரணி அணி அமைப்பாளர் சதிஷ்குமார்,

108வது வட்ட இளைஞரணி துணை அமைப்பாளர் ஜோ.சந்தோஷ் குமார், 58 (அ) வட்ட இளைஞரணி அணி துணை அமைப்பாளர் எல்.சுகுமாரன், தேவநிதி, நாகராஜ், சூளை பன்னீர் செல்வம், புஷ்பராஜ், பாலாஜி அன்புமணி, கோமகன், பாக முகவர் கவிதா, சத்யா, வழக்கறிஞர் தர்மதுரை, கே.பி.பார்க் சதிஷ் உள்ளிட்ட கழக நிர்வாகிகளும், செயல்வீரர்களும் இந்நிகழ்வில் கலந்து கொண்டனர்.

